**16.02.2020**

**பத்திரிக்கை செய்தி**

**சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் இன்று (16.02.2020) வகுப்பு IX முதல் XII வரை பயிலும் மாணவர்களுக்கு போட்டித் தேர்வு நடைபெற்றது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஸ்ரீ சத்ய சாய் சேவா அமைப்புடன் இணைந்து இன்று (16.02.2020) சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் காலை 10:30 முதல் மதியம் 12:30 மணி வரை ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு (ஆங்கிலம் மற்றும் தமிழ் வழிக் கல்வி) இலவச பல தேர்வு கேள்வி அடிப்படையிலான போட்டித் தேர்வு நடைபெற்றது. மேற்கண்ட தேர்வில் மாநில கல்வி வாரியம், மெட்ரிகுலேஷன் மற்றும் சி.பி.எஸ்.இ பிரிவுகளில் பயிலும் 2000 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.